கிடைத்துக் கொண்டுதான் இருந்தன. அவன் எப்போது 'இது உன்னுடையது, அது என்னுடையது' என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தானோ, அப்போதே அவனுக்கு இங்கே எதுவுமே உரிமையில்லாமல் போய் விட்டது!''

## 6. விஞ்ஞானி

''இந்த உலகத்தில் இனி யாரும் எனக்கு இணை யில்லை, என்னால் முடியாத காரியமும் இல்லை!'' என்றான் ஒருவன்.

''யாரப்பா, நீ?'' என்று அவனைக் கேட்டார் ஒரு பெரியவர்.

''என்னைத் தெரியவில்லையா? நான்தான் இந்த உலகத்தின் அஞ்ஞான இருளைப் போக்கிக் கொண் டிருக்கும் விஞ்ஞானி!'' என்றான் அவன் அட்டகாசமாக.

''அப்படியா?'' என்று தலையை ஆட்டிக்கொண்டே தமக்கு அருகிலிருந்த ரோஜாச் செடியிலிருந்து, ஒரு மொட்டைப் பறித்து அவனிடம் கொடுத்து, ''எங்கே, இதைக் கொஞ்சம் மலர வையப்பா பார்ப்போம், உன் விஞ்ஞானத்தால்?'' என்றார் பெரியவர் அமைதியாக.

''பூ! இதென்ன பிரமாதம்!'' என்று அதை அலட்சிய மாக வாங்கி முகர்ந்துகொண்டே தன் ரசாயன அறைக்குள் நுழைந்தான் அவன். அங்கே என்ன முயன்றும் அந்த மொட்டு அவன் எதிர்பார்த்தபடி அவ்வளவு இயற்கையாக மலரவில்லை; அதற்காகப் பொறுமை இழந்து அவனும் அதை விட்டுவிடவில்லை.

உலகம் சிரித்தது; ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டான் மனிதன்.

''உன்னுடைய அறியாமைக்காகத்தான் சிரிக்கிறேன்!'' என்றது உலகம்.

''என்னுடைய அறியாமைக்காகவா!''

''ஆம், எதை வென்று என்ன பிரயோசனம்? உன்னை நீ வெல்லவில்லையே? அதனால்தான் இன்னும் நான் உருப்படாமல் இருக்கிறேன்!'' என்றது உலகம்.

# 11. இன்பம்

கல் ஒன்று இடறிற்று; கட்டை விரலின் நகம் பெயர்ந்து ரத்தம் 'குபுகுபு'வென்று வழிந்தது.

''ச்சூச்சூ!'' என்றது வாய்; கண்கள் கண்ணீர் சிந்தின. வாய் சிரித்தது; ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கண்கள் கேட்டன.

''ஒன்றுமில்லை; உங்களுடைய அசட்டுத்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன்!''என்று கூறியது வாய்.

ஆணியை அடித்துக்கொண்டிருந்த சுத்தியல் தவறிற்று; அதைப் பிடித்துக் கொண்டிருந்த கை அதனால் அடிபட்டு வீங்கிற்று.

''ச்சூச்சூ'' என்றது வாய்; கண்கள் கண்ணீர் சிந்தின. வாய் சிரித்தது; ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டன, கண்கள்.

''ஒன்றுமில்லை; உங்களுடைய அசட்டுத்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன்!'' என்று கூறியது வாய்.

என்று சொல்வாரும் இல்லை; 'இல்லை' என்று சொல்வாரும் இல்லை.

கொஞ்சம் துணிந்து, மெல்லக் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அவ்வளவுதான்; ''புத்தி இருக்கிறதா, உனக்கு? இல்லை கேட்கிறேன்; புத்தி இருக்கிறதா, உனக்கு?'' என்று சீறிக்கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்து வந்தார் அந்த வீட்டுக்காரர்.

அவன் சற்றே பின் வாங்கி, ''கோபித்துக் கொள்ளாதீர்கள் ஐயா! பசி வயிற்றைக் கிள்ளுகிறது; ஒரு பிடி சோறு இருந்தால் போடச் சொல்லுங்கள், ஐயா!'' என்றான் பரக்க விழித்து, பல்லை மிகக் காட்டி.

அவன் சொன்னதை அவர் காதில் போட்டுக் கொள்ள வில்லை; ''நான் கேட்பதற்குப் பதில் சொல்; புத்தி இருக்கிறதா, உனக்கு? இல்லை கேட்கிறேன்; புத்தி இருக்கிறதா, உனக்கு?'' என்று மறுபடியும் கேட்டுக் கொண்டே முன்னேறி, ''இங்கே பார், என்ன எழுதி யிருக்கிறது?'' என்றார் கேட்டின் முகப்பில் மாட்டப் பட்டிருந்த சிறு 'போர்டு' ஒன்றைச் சுட்டிக் காட்டி.

அவன் பார்த்தான்; பார்த்துவிட்டு, ''நாய்கள் ஜாக்கிரதை என்றுதானே எழுதியிருக்கிறது?'' என்றான் ஒன்றும் புரியாமல்.

''அதைப் பார்க்காமல் உள்ளே வரலாமா? இல்லை, கேட்கிறேன்; அதைப் பார்க்காமல் உள்ளே வரலாமா?'' என்று இரைந்தார் அவர்.

''மன்னியுங்கள்; 'மனிதர்கள்தானே உள்ளே இருக்கப் போகிறார்கள்' என்று நான் நினைத்தது தப்புத்தான்!'' என்றான் அவன் அமைதியாக.

# 14. வாலும் தலையும்

ஒரு நாள் நாயிடம், ''உன்னைக் கண்டால் எனக்கு மட்டுமல்ல, மனிதர்களுக்குக்கூட பொறாமையா யிருக்கிறது!'' என்றது பூனை.

''ஏனாம்?'' என்று கேட்டது நாய்.

''வாலை ஆட்டியாட்டிக் காட்டியே நீ பிழைத்துக் கொள்கிறாயல்லவா, அதனால்தான்!'' என்றது பூனை சிரித்துக்கொண்டே.

நாய் அதைத் திருப்பிக் கேட்டது;

''மனிதர்களில் சிலர் தலையை ஆட்டியாட்டிக் காட்டியே பிழைத்துக்கொள்கிறார்களே, அதற்கென்ன சொல்கிறாய், நீ?''

பூனை வாயைத் திறக்கவில்லை.

# 15. நீதி

பொற்கொல்லருக்கு எதிர்த்தாற்போல் இருந்த கண்ணாடிக் கூண்டுக்குள், 'நீதியின் சின்னம் நானே!' என்பதுபோல் தராசு தலை நிமிர்ந்து நின்று கொண் டிருந்தது.

அந்தத் தராசின் ஒரு தட்டில் தங்கத்தையும், இன்னொரு தட்டில் தாமிரத்தையும் வைத்து நிறுத்தார் பொற்கொல்லர்.

தங்கம் வைத்த தட்டு தாழ்ந்தது; தாமிரம் வைத்த தட்டு உயர்ந்தது!

# 18. மாடும் மனிதனும்

ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகத் தன்னை விற்றவனைத் தேடிக்கொண்டு வந்தது மாடு.

வாங்கினவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை; "இனி மேல் இங்கு வருவாயா, இனிமேல் இங்கு வருவாயா?" என்று அதை 'வாங்கு, வாங்கு' என்று வாங்கிவிட்டான்.

வீறிட்டலறிய மாட்டை நோக்கி அதனுடன் வசித்த ஆடு கேட்டது:

"விற்றவன் உன்னை அன்றே மறந்துவிட்டதுபோல் நீயும் அவனை அன்றே மறந்துவிட்டிருந்தால் இந்தக் கதிக்கு ஆளாகி யிருக்கமாட்டாயல்லவா?"

கண்ணீரும் கம்பலையுமாக மாடு சொல்லிற்று:

"அது எப்படி முடியும்? நான் மனிதனாகப் பிறக்காமல் மாடாக அல்லவா பிறந்துவிட்டேன்?"

# 19. குற்றம் எங்கே?

"நீல வானம், நெடுங்கடல், பனி மூடிய மலைச் சிகரங்கள், பழம் உதிரும் சோலைகள், பசுமை நிறைந்த நெல் வயல்கள், பூத்துக் குலுங்கும் செடிகள் கொடிகள், கொட்டும் அருவி, குளிர் தருக்கள்-ஆஹா! இந்த உலகமே ஓர் அற்புதம், அற்புதம்!" என்று பாடிய வானம் பாடியுடன் சேர்ந்து, அதன் பாட்டுக்கேற்பத் தானும் தன் தோகையை விரித்து ஆடியது மயில்.

# 21. பெருமை

''என்னால்தான் நேரம் ஓடுகிறது!'' என்றது கடிகாரம்.

''என்னால்தான் காலம் ஓடுகிறது!'' என்றது காலண்டர்.

''இவை இரண்டும் இப்படிப் பீற்றிக் கொள்கின் றனவே, அந்தச் சூரியன் மட்டும் ஏன் வாயைத் திறக்க மாட்டேன் என்கிறது?'' என்று வானத்தை நோக்கிக் கேட்டது பூமி.

அதற்குப் ''பீற்றிக்கொள்ள வேண்டிய அவசிய மில்லை!'' என்றது வானம்.

# 22. காதல்

மலர் விரிந்து மணம் பரப்பிற்று; அந்த மணத் தையே தனக்கு விடுத்த அழைப்பாகக் கொண்டு அதைத் தேடி வந்தது ஒரு வண்டு.

ரீங்......ரீங்......ரிரி......ரீங்......

''வந்துவிட்டயா, என்னைச் சுற்றிச் சுற்றி வந்து ரீங் காரம் பாட?'' என்றது மலர், தென்றலில் சற்றே அசைந்து.

''நானா வந்தேன்? மனம் கவரும் உன் மணமல்லவா என்னை இங்கே வரவழைத்தது? மகிழ்வூட்டும் உன் அழகல்லவா என்னைப் பாட வைத்தது?'' என்று அடுக்க ஆரம்பித்தது வண்டு.